தினமணி

"தமிழகத்தில் காடு வளர்ப்புத் திட்டத்திற்கு ஜப்பான் ரூ. 686 கோடி நிதியுதவி'

First Published : 01 Jun 2012 03:47:35 AM IST

கோவை, மே 31: தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்திற்கு மூன்றாவது கட்டமாக ரூ. 686 கோடி நிதி ஒதுக்க ஜப்பான் சர்வதேச கூட்டுறவு நிறுவனம் முன்வந்துள்ளதாக, கோவை மாவட்ட வன அலுவலர் வி.திருநாவுக்கரசு தெரிவித்தார்.

கோவையில் உள்ள தமிழ்நாடு வனக் கல்லூரியில் "சுற்றுச்சூழல்: சீரான மேம்பாடு' குறித்த பயிலரங்கம் புதன்கிழமை நடைபெற்றது. இதில், மாவட்ட வன அலுவலர் வி.திருநாவுக்கரசு பேசியது:

தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்திற்கு, ஜப்பான் சர்வதேச கூட்டுறவு நிறுவனம் நிதியுதவி செய்தது; 1997 -2000 மற்றும் 2004-2011 என இரண்டு கட்டங்களாக உதவி செய்தது. காடு வளர்ப்புத் திட்டத்தின் மூலம் தமிழக வனப் பரப்பளவு அதிகரித்துள்ளது.

இப்போது மூன்றாவது கட்டத்திற்கு, 2011-2019 வரை நிதியுதவி செய்ய ஜப்பான் முன்வந்துள்ளது. மூன்றாவது கட்டத் திட்டமான, தமிழ்நாடு பல்லுயிர்ப் பாதுகாப்பு மற்றும் பசுமைத் திட்டத்திற்கு ரூ. 686 கோடி நிதி அளிக்க முன்வந்துள்ளது.

இத்திட்டத்தின் மூலம் காப்புக் காடுகளை மேம்படுத்துதல், பல்லுயிர்ப் பெருக்கத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றுடன் மலைவாழ் மக்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படும்.

தமிழகத்தில் சுமார் 33 மலைவாழ் கிராமங்களில் மேம்பாட்டுப் பணிகள் நடைபெறவில்லை. இப்பட்டியலில், கோவை மாவட்டத்தில் 10 மலைவாழ் கிராமப் பகுதிகள் உள்ளன. மலைவாழ் மக்களின் வறுமையைப் போக்குவதன் மூலமாகவே சீரான மேம்பாட்டை அடைய முடியும்.

மேலும் மாவட்டத்தில் உள்ள கடமான்கோம்பை, கல்லார்புதூர், கீழ்செங்கல்லார், மானார், முதல்மான்கோம்பை, சீங்குபதி, சிட்டுகுனி, தோண்டை, உளியூர், வேப்பமரத்தூர் ஆகிய 10 மலைவாழ் கிராமங்களில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

## இன்று கிருஷ்ணா நீர் தமிழகத்தை வந்தடையும்

First Published : 01 Jun 2012 01:25:37 AM IST



ஆந்திரம் - தமிழகம் எல்லையில் அமைந்துள்ள ஜீரோ பாயின்ட் கால்வாய் பகுதி (கோப்பு படம்)

சென்னை, மே 31: ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையிலிருந்து திறக்கப்பட்ட கிருஷ்ணா நதி நீர் வெள்ளிக்கிழமை காலை தமிழகத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கிருஷ்ணா குடிநீர் ஒப்பந்தப்படி ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையிலிருந்து தமிழகத்துக்கு ஆண்டுதோறும் 12 டி.எம்.சி தண்ணீர் வழங்கப்படும். இந்த தண்ணீர் பூண்டி ஏரியில் தேக்கி வைக்கப்பட்டு, சென்னை மாநகரில் குடிநீருக்குப் பயன்படுத்தப்படும்.

ஆண்டுதோறும் ஜனவரியிலேயே கண்டலேறு அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படும். ஆனால் இந்த ஆண்டு தண்ணீர் திறப்பதற்கு தாமதம் ஏற்பட்டது.

இதையொட்டி தமிழகத்துக்கு தண்ணீரை வழங்க வேண்டும் என கடந்த மார்ச் 23-ம் தேதி முதல்வர் ஜெயலலிதா ஆந்திர மாநில முதல்வருக்கு கடிதம் எழுதியிருந்தார்.

இதையடுத்து கண்டலேறு அணையிலிருந்து மே 20-ம் தேதி விநாடிக்கு 500 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. வழக்கமாக தண்ணீர் திறந்துவிடப்பட்டவுடன், தெலுங்கு கங்கை கால்வாய் வழியாக 152 கி.மீ. தூரத்தை கடந்து 5 அல்லது 6 நாள்களில் தமிழக எல்லையான ஜீரோ பாயின்டுக்கு வந்துவிடும்.

அண்மையில் ஆந்திர மாநிலம் காளஹஸ்தி அருகே கிருஷ்ணா நதியின் குறுக்கே கட்டப்பட்ட மதகு மழை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது.

இதனால் தெலுங்கு கங்கை கால்வாயில் சில இடங்களில் சேதம் ஏற்பட்டது. இதன் காரணமாக 5 நாள்களில் வரவேண்டிய தண்ணீர் இந்த முறை தாமதமாக வருகிறது. இன்று காலை தமிழக எல்லைக்கு தண்ணீர் வரும்: வியாழக்கிழமை மாலை நிலவரப்படி தமிழக எல்லையான ஜீரோ பாயின்டில் இருந்து 18 கி.மீ. தொலைவில் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் தமிழக எல்லையான ஜீரோ பாயின்டை தண்ணீர் வந்தடையும் என தமிழக பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளின் நிலவரம்: வியாழக்கிழமை காலை நிலவரப்படி பூண்டி நீர்த்தேக்கத்தில் 2 ஆயிரத்து 87 மில்லியன் கன அடி தண்ணீர் உள்ளது. செம்பரம்பாக்கத்தில் ஆயிரத்து 335 மில்லியன் கன அடி, புழலில் ஆயிரத்து 190 மில்லியன் கன அடி, சோழவரத்தில் 83 மில்லியன் கன அடி நீர் இருப்பில் உள்ளது. கண்டலேறு அணையிலிருந்துவரும் தண்ணீரால் அனைத்து ஏரிகளும் முழு கொள்ளளவை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ரூ.5.50 லட்சத்தில் 55 பயனாளிகளுக்கு விலையில்லா ஆடுகள்

First Published : 31 May 2012 12:37:26 PM IST

செங்கம், மே 30: செங்கத்தை அடுத்துள்ள சென்னசமுத்திரத்தில் தமிழக அரசின் விலையில்லா ஆடுகள் வழங்கும் நிகழ்ச்சி புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செங்கம் ஒன்றியக்குழுத் தலைவர் எம். கணேசன் தலைமை வகித்தார். ஆணையர் ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். ஊராட்சித் தலைவர் கோபி வரவேற்றார்.

நிகழ்ச்சியில், திருவண்ணாமலை மாவட்ட வணிகவரித்துறை ஆலோசனைக் குழு உறுப்பினர் ஆர். மதியழகன் கலந்துகொண்டு சென்னசமுத்திரம் கிராம ஊராட்சிக்கு உள்பட்ட 55 பயனாளிகளுக்கு ரூ.5.50 லட்சம் மதிப்பில் 220 விலையில்லா ஆடுகளை வழங்கிப் பேசினார். இந்நிகழ்ச்சியில், முன்னாள் ஊராட்சித் தலைவர் குணசேகரன், கால்நடை மருத்துவர் மெகபூப்கான், ஒன்றியக்குழு உறுப்பினர்கள் செப்ந்தர், ராஜாராம், குமார், அமராவதி, துணைத் தலைவர் அருள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## தொடக்க வேளாண்மை வங்கி: வைப்பு நிதி சேகரிப்பு விழா

First Published : 31 May 2012 12:07:15 PM IST

நாகர்கோவில், மே 30:÷அகஸ்தீசுவரம் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி சார்பில் நிரந்தர வைப்புநிதி சேகரிப்பு விழா நடைபெற்றது.

÷விழாவை கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் வி.எம்.கலைச்செல்வன் தொடக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் நான்குபேரிடமிருந்து ரூ. 2 கோடிக்கான நிரந்தர வைப்பு நிதியை கலைச்செல்வன் பெற்றார்.

÷பின்னர் அவர் பேசுகையில் , பொதுமக்கள் வங்கியில் செலுத்தும் நிரந்தர வைப்பு நிதிக்கு அரசின் உத்தரவாதம் உள்ளதோடு, 10.5 சதவீதம் வட்டியும், மூத்த குடிமக்களுக்கு 11 சதவீதம் வட்டியும் வழங்கப்படுவதாகத் தெரிவித்தார். ÷இந்நிகழ்ச்சியில் நாகர்கோவில் சரக துணைப்

பதிவாளர் ஆர் சிவதாணு, இணைப் பதிவாளர் அலுவலகப் பணியாளர் ஞா. ஜெயராஜ், மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தனி அலுவலர்

செ. செல்வின் ஜெயபாலன், இணைப் பதிவாளர் அலுவலக கண்காணிப்பாளர் கண்ணன், வங்கி தனி

அலுவலர் புஷ்பகலா, செயலர்

பி.தேவசுதர்சன், மாநில வேளாண்மை, ஊரக வளர்ச்சி வங்கி மண்டல மேலாளர் ஜெயசீலி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**நிலக்கடலை சாகுபடி: வேளாண் துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஜூன் 01,2012,05:46 IST

ஓசூர்: ஓசூர் தாலுகாவில் மானாவாரியில் நிலக்கடலை சாகுபடி செய்வது குறித்து வேளாண் துறை அறிவுரை வழங்கியுள்ளது.

ஓசூர் வேளாண் உதவி இயக்குனர் நாகராஜன் கூறியதாவது:

நிலக்கடலை பயிர் சாகுபடிக்கு மணல் பாங்கான வண்டல், செம்மண் மற்றும் வண்டல் நிலங்கள் ஏற்றது. சட்டி கலப்பையை பயன்படுத்தி உழுதபின் மூன்று அல்லது நான்கு முறை இரும்பு கலப்பை அல்லது நாட்டுக்கலப்பையை கொண்டு மண் புழுதியாகும் வரை உழ வேண்டும்.

நிலக்கடலையை பொறுத்தவரையில் டி.எம்.வி-2, டி.எம்.வி-7 மற்றும் ஜே.எல்-24 ரகங்களை பயிரிடலாம். நன்கு மக்கிய தொழு உரம் அல்லது தென்னை நார் கழிவினை ஏக்கருக்கு 5 டன் என்ற அளவில் கடைசி உழவுக்கு முன் இட வேண்டும்.

மானாவாரி பயிருக்கு, 9 கிலோ யூரியா, 25 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 30 கிலோ பொட்டாஷ் உரத்தினை தொழு உரமாக இட வேண்டும். விதை மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்த ஒரு கிலோ விதைக்கு, 4 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி அல்லது 10 கிராம் சூடோமோனாஸ் புளூரசன்ஸ் நுண்ணுயிரை கலக்க வேண்டும்.

விதைக்கும்போது ஒரு ஏக்கருக்கு தேவையான விதையுடன் இரு பாக்கெட் ரைசோபியம் மற்றும்

பாஸ்போ பாக்டீரியா இரு பாக்கெட் உரங்களை அரிசி கஞ்சியில் கலந்து விதைக்க வேண்டும். நிலக்கடலை பயிரின் வேர்முடிச்சி காற்றில் உள்ள தழைச்சத்தை பயிருக்கு கிடைக்க செய்கிறது.

பாஸ்போ பாக்டீரியா மண்ணில் கரையாத நிலையில் உள்ள மணிச்சத்தை கரைத்து பயிர்களின் வேர்கள் எடுத்து கொள்ளும் நிலைக்கு தருகிறது. 30க்கு 10 செ.மீ., 1 சதுர மீட்டரில் 33 செடிகள் இருக்க வேண்டும்.

விதைத்த 45 நாள் ஒரு ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சம் இட்டு மண் அணைக்க வேண்டும். ஜிப்சத்தில் உள்ள சுண்ணாம்பு சத்து 24 சவீதமும் மற்றும் கந்தக சத்து 18.5 சதவீதம் நிலைக்கடலையில் திரட்சியான காய்கள் உருவாகி மசூல் அதிகரிக்க செய்கிறது.

இவ்வாறு கூறினார்.

## மல்லிகைக்கு கிராக்கி: ரூ.400 க்கு விற்பனை

பதிவு செய்த நாள் : ஜூன் 01,2012,01:27 IST

திண்டுக்கல்:முகூர்த்த நாட்களால் மல்லிகை பூவிற்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. திண்டுக்கல் பூச் சந்தையில் நேற்று கிலோ ரூ.400 க்கு விற்கப்பட்டது.திண்டுக்கல், சுற்றியுள்ள பகுதி விவசாயிகள் மல்லிகை சாகுபடி செய்வதை விரும்புகின்றனர்.

முகூர்த்தம் இல்லாத மாதங்களில் கூட "எசன்ஸ்' நிறுவனங்கள் மொத்தமாக வாங்கிச் சென்று விடுவர். இதனால் நஷ்டம் ஏற்படாது.

மூன்று மாதங்களாக மல்லிகை விளைச்சல் அமோகமாக இருந்ததால், கிலோ ரூ.100 க்கு விற்கப்பட்டது. வாடிக்கையாளர்களின் தேவைபோக எஞ்சியிருந்த பூக்கள், "எசன்ஸ்' நிறுவனங்களுக்கு கிலோ ரூ.45 க்கு விற்கப்பட்டது.

லாபத்தை எதிர்பார்த்திருந்த விவசாயிகளை மல்லிகை ஏமாற்றிக்கொண்டிருந்தது.

இந்நிலை வைகாசியில் தலைகீழாக மாறியுள்ளது. வரத்து குறைந்துள்ளதால் நேற்று, கிலோ ரூ.400 க்கு விற்றது. சம்பங்கி, கனகாம்பரம் தலா ரூ.250 க்கும், கோழிக்கொண்டை ரூ.60 க்கும், சென்டு மல்லி ரூ.50 க்கும், முல்லை ரூ.300 க்கும், ரோஜா ரூ.100 க்கும் விற்கப்பட்டன.

மல்லிகை விலை ஏற்றத்தால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அடுத்தடுத்து வரும் முகூர்த்தங்களால் மல்லிகை விலை மேலும் அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

## நெல்லுக்கான ஆதரவு விலையை ரூ.1,250 ஆக உயர்த்த பரிந்துரை

ஜூன் 01,2012,00:12



புதுடில்லி:மத்திய வேளாண் அமைச் சகம், வரும் 2012-13ம் பருவத்திற்கு (ஜூலை-ஜூன்), ஒரு குவிண்டால், நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை, 1,250 ரூபாயாக உயர்த்த பரிந்துரை செய்துள்ளது.

வேளாண் உற்பத்தி:நாட்டின் வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், மத்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் தானியங்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்தி வருகிறது.இவ்வகையில், வரும் 2012-13ம் பருவத்திற்கு, ஒகு குவிண்டால் சாதாரண வகை நெல்லுக்கு, குறைந்தபட்ச ஆதரவு விலையாக, 1,250 ரூபாயும், உயர் வகை நெல்லுக்கு, 1,280 ரூபாய் வழங்கவும் பரிந்துரை செய்துள்ளதாக மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது. நடப்பு 2011-12ம் பருவத்திற்கு, ஒரு குவிண்டால் சாதாரண நெல்லுக்கு, 1,080 ரூபாயும், உயர்வகை நெல்லுக்கு, 1,110 ரூபாயும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

இந்தியாவில், ஓர் ஆண்டில் கரீப் மற்றும் ரபி என்ற இரு பருவங்களில், வேளாண் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. இவற்றுள் கரீப் பருவம் என்பது, தென்மேற்கு பருவ மழை துவங்கும் ஜூன் மாதம் துவங்குகிறது. அக்டோபரில் அறுவடை மேற்கொள்ளப்படுகிறது.


பருப்பு வகைகள்:மத்திய அரசு, வரும் வேளாண்பருவத்தில், சாகுபடி செய்யப்படும் பல்வேறு பருப்பு வகைகளுக்கு, ஒரு குவிண்டாலுக்கு, குறைந்தபட்ச ஆதரவு விலையை, 800 முதல் 1,000 ரூபாய் வரை உயர்த்தும் வகையில், பரிந்துரை செய்துள்ளது.

இவ்வகையில், ஒரு குவிண்டால், பாசிப் பருப்பிற்கான குறைந்தபட்ச ஆதரவு விலை, 4,500 ரூபாயும், உளுத்தம் பருப்பிற்கு, 4,300 ரூபாயும், துவரம் பருப்பிற்கு, 4,000 ரூபாய் வழங்கவும் பரிந்துரை செய்துள்ளது.நடப்பு 2011-12ம் பருவத்தில், இவற்றிற்கான குறைந்தபட்ச ஆதரவு விலை முறையே, 3,500, 3,300 மற்றும் 3,200 ரூபாய் என்றளவில் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.விவசாயிகளுக்கு ஊக்கம் அளித்து, உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், பருப்பு வகைகளுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை கணிசமாக உயர்த்த

பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக, வேளாண் அமைச்சகத்தைச் சேர்ந்த உயரதிகாரி தெரிவித்தார்.
எண்ணெய் வித்துக்கள்:எண்ணெய் வித்துக்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை, 37 சதவீத அளவிற்கு அதிகரிக்கும் வகையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இவ்வகையில், ஒரு குவிண்டால், நிலக்கடலை மற்றும் சூரிய காந்தி விதைக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை, 3,700 ரூபாயாகவும், சோயா வித்துக்களுக்கான கொள்முதல், 2,200 ரூபாயாகவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.நடப்பு 2011-12ம் பருவத்தில், ஒரு குவிண்டால் நிலக்கடலை மற்றும் சூரிய காந்தி எண்ணெய் வித்துக்களுக்கான கொள்முதல் விலை, 2,700 மற்றும் 2,800ரூபாயாகவும், சோயா வித்துக்களுக்கான கொள்முதல் விலை, 1,650 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.
பருத்தி:மத்திய வேளாண் அமைச்சகம், வரும் பருவத்திற்கு, ஒரு குவிண்டால் பருத்திக்கு, குறைந்தபட்ச ஆதரவு விலையாக, 3,600-3,900 வழங்க பரிந்துரை செய்துள்ளது. நடப்பு பருவத்தில், இதற்கான விலை, 2,200-3,300 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

## நடப்பு 2012ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் முக்கிய துறைகளின் உற்பத்தி வளர்ச்சி 2.2 சதவீதமாக குறைந்தது

ஜூன் 01,2012,00:15




புதுடில்லி:நடப்பு 2012ம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தில், நாட்டின் முக்கிய எட்டுத் துறைகளின் உற்பத்தி வளர்ச்சி, 2.2 சதவீதமாக குறைந்துள்ளது. இது, கடந்த ஆண்டின் (2011), இதே ஏப்ரல் மாதத்தில், 4.2 சதவீதம் என்றளவில் உயர்ந்து காணப்பட்டது.
தொழில் அமைச்சகம் :கடந்த 2011-12ம் முழு நிதியாண்டில், முக்கிய எட்டுத் துறைகளின் உற்பத்தி வளர்ச்சி, 4.4 சதவீதமாக குறைந்துள்ளது. இது, முந்தைய 2010-11ம் நிதியாண்டில், 6.6 சதவீதம் என்றளவில் உயர்ந்திருந்தது என, மத்திய தொழில் மற்றும் வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.
நாட்டின் முக்கிய எட்டு தொழில் துறைகளின் கீழ், நிலக்கரி, கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு, சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலியப் பொருட்கள், உரம், உருக்கு, சிமென்ட், மின்சாரம் ஆகியவை

இடம்பெற்றுள்ளன.இவற்றுள், சென்ற ஏப்ரல் மாதத்தில், நிலக்கரி, உருக்கு, சிமென்ட், மின்சாரம் ஆகிய நான்கு துறைகளின் உற்பத்தி வளர்ச்சி கண்டுள்ளது. அதேசமயம், கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு, சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலியப் பொருட்கள், உரம் ஆகிய நான்கு துறைகளின் உற்பத்தி பின்னடைவைக் கண்டுள்ளது.முக்கிய எட்டு துறைகளின் உற்பத்தி வளர்ச்சி குறியீட்டு எண், 2004-05ம் ஆண்டை, அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுகிறது.சென்ற ஏப்ரல் மாதத்தில், நிலக்கரித் துறையின் உற்பத்தி வளர்ச்சி, 3.8 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது, கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில், 2.7 சதவீதம் என்றளவில் இருந்தது. கடந்த 2011-12ம் முழு நிதியாண்டில், இத்துறையின் உற்பத்தி வளர்ச்சி, 1.2 சதவீதமாக இருந்தது. அதேசமயம், கடந்த 2010-11ம் நிதியாண்டில், இத்துறை, மைனஸ் 0.2 சதவீதம் என்றளவில் பின்னடைவைக் கண்டிருந்தது.

கச்சா எண்ணெய்:நடப்பாண்டு ஏப்ரல் மாதத்தில், கச்சா எண்ணெய் துறையின் உற்பத்தி, மைனஸ் 1.3 சதவீதமாக பின்னடைவைக் கண்டுள்ளது. அதேசமயம், கடந்த ஆண்டு, ஏப்ரலில், இத்துறை, 11 சதவீதம் என்றளவில் வளர்ச்சி கண்டிருந்தது. சென்ற நிதியாண்டில், இத்துறையின் உற்பத்தி வளர்ச்சி, 1 சதவீதம் என்றளவில் இருந்தது. இது, முந்தைய நிதியாண்டில், 11.9 சதவீதம் என்றளவில் மிகவும் அதிகரித்திருந்தது.

இயற்கை எரிவாயு:சென்ற ஏப்ரல் மாதத்தில், நாட்டின் இயற்கை எரிவாயு துறையின் உற்பத்தி, மைனஸ் 11.3 சதவீதம் என்றளவில் பின்னடவைக் கண்டுள்ளது. இது, கடந்த ஆண்டின் இதே மாதத்தில், மைனஸ் 9.3 சதவீதமாக இருந்தது. சென்ற முழு நிதியாண்டில், இத்துறையின் உற்பத்தி, மைனஸ் 8.9 சதவீதம் என்றளவில் பின்னடைவைக் கண்டிருந்தது.

அதேசமயம், கடந்த 2010-11ம் நிதியாண்டில், இத்துறை, 10 சதவீதம் என்றளவில் வளர்ச்சி கண்டிருந்தது.பெட்ரோலிய பொருட்கள்:சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலிய பொருட்கள் துறையின் உற்பத்தி, சென்ற ஏப்ரலில், மைனஸ் 2.8 சதவீதம் என்றளவில் பின்னடைவைக் கண்டுள்ளது. அதேசமயம், கடந்த ஆண்டு இதே ஏப்ரல் மாதத்தில், இத்துறை, 6.6 சதவீதம் என்றளவில் வளர்ச்சி கண்டுள்ளது. சென்ற முழு நிதியாண்டில், இத்துறையின் ஒட்டுமொத்த உற்பத்தி வளர்ச்சி, 3.2 சதவீதமாக உயர்ந்துள்ளது. முந்தைய நிதியாண்டில், இத்துறையின் வளர்ச்சி, 3 சதவீதமாக இருந்தது.

உரத்துறைசென்ற ஏப்ரல் மாதம், நாட்டின் உரத்துறையின் உற்பத்தி, மைனஸ் 9.3 சதவீதமாக பின்னடைவைக் கண்டுள்ளது. கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில், இத்துறையின் உற்பத்தி, மைனஸ் 1.3 சதவீதம் என்றளவில் பின்னடைவைக் கண்டிருந்தது. சென்ற 2011-12ம் நிதியாண்டில், இத்துறையின் உற்பத்தி வளர்ச்சி, 0.4 சதவீதமாக இருந்தது.உருக்கு துறை:சென்ற ஏப்ரல் மாதத்தில், நாட்டின் உருக்குத் துறையின் உற்பத்தி வளர்ச்சி, 5.8 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது, கடந்த ஆண்டின் இதே ஏப்ரல் மாதத்தில், 2.9 சதவீதமாக இருந்தது. ஒட்டுமொத்த அளவில், சென்ற முழு நிதியாண்டில், இத்துறையின் உற்பத்தி வளர்ச்சி, 7

சதவீதமாக உள்ளது. அதேமயம், முந்தைய நிதியாண்டில், இத்துறையின் உற்பத்தி வளர்ச்சி, 13.2 சதவீதம் என்றளவில் மிகவும் அதிகரித்து காணப்பட்டது.

சிமென்ட் துறை:சென்ற ஏப்ரல் மாதத்தில், நாட்டின் சிமென்ட் துறையின் உற்பத்தி வளர்ச்சி, 8.6 சதவீதம் என்றளவில் மிகவும் அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டு, ஏப்ரல் மாதத்தில், இந்த வளர்ச்சி, 0.1 சதவீதம் என்றளவில் இருந்தது. சென்ற முழு நிதியாண்டில், இத்துறையின் ஒட்டுமொத்த உற்பத்தி வளர்ச்சி, 6.7 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது, முந்தைய நிதியாண்டில், 4.5 சதவீதம் என்றளவில் இருந்தது.

மின்சாரம்:சென்ற ஏப்ரல் மாதத்தில், நாட்டின் மின் உற்பத்தித் துறையின் வளர்ச்சி, 4.6 சதவீதமாக இருந்தது. அதேசமயம், கடந்த ஆண்டின் ஏப்ரல் மாதத்தில், இத்துறையின் உற்பத்தி வளர்ச்சி, 6.4 சதவீதம் என்றளவில் அதிகரித்து காணப்பட்டது. சென்ற 2011-12ம் முழு நிதியாண்டில், இத்துறையின் உற்பத்தி வளர்ச்சி, 8.1 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது, முந்தைய நிதியாண்டில், 5.6 சதவீதம் என்றளவில் குறைந்து காணப்பட்டது.

## முக்கிய பொருட்கள் இறக்குமதி ரூ.92,574 கோடி

ஜூன் 01,2012,00:10



புதுடில்லி:கடந்த 2011-12ம் நிதியாண்டின் ஏப்ரல் முதல் பிப்ரவரி வரையிலான, 11 மாத காலத்தில், முக்கிய பொருட்கள் இறக்குமதி, முந்தைய ஆண்டின் இதே காலத்தை விட, 40.9 சதவீதம் அதிகரித்து, 92 ஆயிரத்து 574 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது என, மத்திய வர்த்தக அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.கடந்த 2010-11ம் நிதியாண்டின் இதே காலத்தில், முக்கிய பொருட்கள் இறக்குமதி, 65 ஆயிரத்து 695 கோடி ரூபாயாக இருந்தது.

முக்கிய பொருட்கள், இறக்குமதியின் கீழ், சமையல் எண்ணெய், பழங்கள் மற்றும் காய்கறிகள், பால் மற்றும் பால் பொருட்கள், தானியங்கள், குளிர்பானங்கள், மோட்டார் வாகனங்கள் போன்றவை இடம்பெற்றுள்ளன.இவ்வகையில், கணக்கீட்டு காலத்தில், பழங்கள் மற்றும்

காய்கறிகள் இறக்குமதி, 75.3 சதவீதம் அதிகரித்து, 4,776 கோடியிலிருந்து, 8,374 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.சமையல் எண்ணெய் இறக்குமதி, 54.7 சதவீதம் உயர்ந்து, 27 ஆயிரத்து 314 கோடியிலிருந்து, 42 ஆயிரத்து 263 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. சர்வதேச அளவில், சமையல் எண்ணெய் இறக்குமதியில், இந்தியாவின் பங்களிப்பு மிகவும் அதிகமாக உள்ளது.

---

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்தது

பதிவு செய்த நேரம்:2012-06-01 10:53:11

மேட்டூர்: மேட்டூர் அணையின் நீர்வரத்து நேற்று மாலை வினாடிக்கு 1644 கனஅடியாக குறைந்தது.
காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்துள்ளதால் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு குறைந்துள்ளது. நேற்று முன்தினம் மாலை வினாடிக்கு 1735 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று மாலை 1644 கனஅடியாக அதிகரித்தது.
நாமக்கல், ஈரோடு, கரூர் உள்ளிட்ட 11 மாவட்டங்களின் குடிநீர் தேவைக்காக அணையிலிருந்து வினாடிக்கு 1031 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அணையின் நீர்மட்டம் நேற்று மாலை 79.52 அடியாக இருந்தது. அணையின் நீர் இருப்பு 41.48 டிஎம்சி.

---